

PALM SUNDAY
HOSANNA IN THE HIGHEST
EN NESAR ENNUDAYAVAR CHURCH
En Nesar Ennudayavar Church
No.1, Periyar Street, Nehru Nagar,
Check Post, Velachery, Chennai-42.
Pas. Kingsly Paul, 9841661002

# 1. கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு -Fm

கிறிஸ்துவுக்குள் வாழும் எனக்கு
எப்போதும் வெற்றி உண்டு
வெற்றி உண்டு - 3 (எனக்கு)

என்னென்ன துன்பம் வந்தாலும்
நான் கலங்கிடவே மாட்டேன்
யார் என்ன சொன்னாலும்
நான் சோர்ந்து போகமாட்டேன்

என் ராஜா முன்னே செல்கிறார்
வெற்றிப் பவனி செல்கிறார்
குரத்தோலை கையில் எடுத்து
நான் ஓசான்னா பாடிடுவேன்

சாத்தானின் அதிகாரமெல்லாம்
என் நேசர் பறித்துக் கொண்டார்
சிலுவையில் அறைந்து விட்டார்
காலாலே மிதித்துவிட்டார்

பாவங்கள் போக்கிவிட்டார்
சாபங்கள் நீக்கி விட்டார்
இயேசுவின் தழும்புகளால்
சுகமானேன் சுகமானேன்

மேகங்கள் நடுவினிலே
ஏன் நேசர் வரப் போகிறார்
கரம் பிடித்து அழைத்துச் செல்வார்
கண்ணீரெல்லாம் துடைப்பார்

# 2. ஆண்டவர் படைத்த வெற்றியின் - F

ஆண்டவர் படைத்த வெற்றியின் நாளிது
இன்று அகமகிழ்வோம் அக்களிப்போம்
அல்லேலூயா பாடுவோம்

அல்லேலூயா தோல்வி இல்லை
அல்லேலூயா வெற்றி உண்டு

எனக்கு உதவிடும் எனது ஆண்டவர்
என் பக்கம் இருக்கிறார்
உலக மனிதர்கள் எனக்கு எதிராக
என்ன செய்ய முடியும்

தோல்வி இல்லை எனக்கு
வெற்றி பவனி செல்வேன்
தோல்வி இல்லை நமக்கு
வெற்றி பவனி செல்வோம்

எனது ஆற்றலும் எனது பாடலும்
எமது மீட்புமானார்
நீதிமான்களின் (கூடாரத்தில்) சபைகளிலே
வெற்றி குரல் ஒலிக்கட்டும்

தள்ளப்பட்ட கல் கட்டிடம் தாங்கிடும்
மூலைக்கல் ஆயிற்று
கர்த்தர் செயல் இது அதிசயம் இது
கைத்தட்டிப் பாடுங்களேன்

என்றும் உள்ளது உமது பேரன்பு
என்று பறைசாற்றுவேன்
துன்ப வேளையில் நோக்கி
கூப்பிட்டேன் துணையாய் வந்தீரையா

## 3. குதூகலம் கொண்டாட்டமே -F

குதூகலம் கொண்டாட்டமே
என் இயேசுவின் சந்நிதானத்தில்
ஆனந்தம் ஆனந்தமே
என் அன்பரின் திருப்பாதத்தில்

பாவமெல்லாம் பறந்தது நோய்களெல்லாம் தீர்ந்தது
இயேசுவின் இரத்தத்தினால்
கிறிஸ்துவுக்குள் வாழ்வு கிருபையால் மீட்பு
பரிசுத்த ஆவியினால்

தேவாதி தேவன் தினம்தோறும் தங்கும்
தேவாலயம் நாமே
ஆவியான் தேவன் அச்சாரமானார்
ஆதிசயம் அதிசயமே

வல்லவர் என் இயேசு
வாழ வைக்கும் தெய்வம்
வெற்றிமேலே வெற்றி தந்தார்
ஒருமனமாய் கூடி ஓசான்னா பாடி
ஊரெல்லாம் கொடியேற்றுவோம்

எக்காள சத்தம் தூதர்கள் கூட்டம்
நேசர் வருகின்றார்
ஒருநொடி பொழுதில் மறுரூபமாவோம்
மகிமையில் பிரவேசிப்போம்

# 4. யோசனையில் பெரியவரே – Gm

யோசனையில் பெரியவரே ஆராதனை ஆராதனை
செயல்களிலே வல்லவரே ஆராதனை ஆராதனை

ஓசான்னா உன்னத தேவனே
ஓசான்னா ஓசான்னா ஓசான்னா

1. கண்மணி போல் காப்பவரே
கழுகு போல சுமப்பவரே

2. சிலுவையினால் மீட்டவரே
சிறகுகளால் மூடுபவரே

3. வழி நடத்தும் விண்மீனே
ஒளி வீசும் விடிவெள்ளியே

## 5. பரிசுத்தர் அல்லேலூயா ஓசன்னா -Em

பரிசுத்தர்- 8…
அல்லேலூயா- 8…
ஓசன்னா- 8…

## 6. என் அன்பே என் அன்பே

என் அன்பே என் அன்பே
என் அன்பே என் அன்பே-2

உந்தன் மகா பரிசுத்த ஸ்தலத்தில்நான் உம்மை பார்க்கணும்
உந்தன் முகத்தைப் பார்த்து நான் உம்மை ரசிக்கணும்

பாவியைப் போல தூரத்தில் நின்று பார்த்திட விரும்பவில்லை
பிள்ளையைப்போல உம்மிடம் வந்து பேசிட விரும்புகிறேன்

மகனாய் வந்து மடியில்தவழ்ந்து நேசம் மகிழ்ந்திடுவேன்
முத்தங்கள் தந்து பாசத்தைக் காட்டி பரவசமடைந்திடுவேன்

வாரினால் அடிபட்டு முள்முடி சுமந்த உம் அன்பை
எண்ணுகிறேன் துரோகியாய் இருந்த என்னையும் நேசித்த உம்
அன்பை பாடுகிறேன்

நீர் பேசிடும் எல்லா காரியம் விட்டு முற்றும்
விலகிடுவேன் உம் அறைக்குள் வந்து அருகில் உம்மோடு
இரகசியம் பேசிடுவேன்

# 7. எல்லையில்லா உந்தன் அன்பு -Fm

எல்லையில்லா உந்தன் அன்பால்
எந்தன் உள்ளம் கொள்ளை கொண்ட மன்னவா உமக்கு நன்றி- இயேசு

கள்ளமில்லா உந்தன் அன்பினால் எனக்குள்தெல்லாம்-2 மறந்தேன்
கல்லும் முள்ளும் எந்தன் வாழ்வில்-2
என்னை நடத்தின விதம் தனை மறவேன்-
**நான் மறவேன்-4**

தொல்லை மிகுந்த உலகில், இல்லை ஆறுதல் எனக்கு-
அல்லல் நிறைந்த எந்தன் வாழ்வில்-2 என்னை நடத்தின விதம் தனை மறவேன்-2
**நான் மறவேன்-4**

சொல்லி முடியாது நாதா, உம் அன்பு அள்ளி தீராது தேவா-2
உள்ள உறுதியுடன் நானும்-2
உம் சமூகம் சேரும் வரை துதிப்பேன்-2
**நான் துதிப்பேன்-4**

நன்றி நன்றி நன்றி நன்றி-8... இயேசுவுக்கே
நன்றி நன்றி நன்றி நன்றி ராஜாவுக்கே
அல்லேலூயா ஓசன்னா அல்லேலூயா ஓசன்னா -2
அல்லேலு அல்லேலு அல்லேலு அல்லேலு அல்லேலு -8
அல்லேலுயா ஓசன்னா

# *8. இயேசு ராஜா முன்னே செல்கிறார்* -Gm

*இயேசு ராஜா*
*முன்னே செல்கிறார்*
*ஓசன்னா கீதம் பாடுவோம்*
*வேகம் சென்றிடுவோம்*
*ஓசன்னா ஜெயமே - 2*
*ஓசன்னா ஜெயம்*
*நமக்கே - 2*

*அல்லேலூயா*
*துதி மகிமை என்றும்*
*அல்லேலூயா துதி மகிமை*
*இயேசு ராஜா*
*எங்கள் ராஜா - 2*
*என்றென்றும் போற்றிடுவோம்*

*துன்பங்கள்*
*சூழ்ந்து வந்தாலும்*
*தொல்லை கஷ்டங்கள்*
*தேடி வந்தாலும்*
*பயமுமில்லை கலக்கமில்லை*
*கர்த்தர் நம்முடனே*

*யோர்தானின்*
*வெள்ளம் வந்தாலும்*
*எரிக்கோ கோட்டை எதிர் நின்றாலும்*
*பயமுமில்லை கலக்கமில்லை*
*மீட்பர் நம்முடனே*

# 9. பொன்னான இயேசுவை -Gm

பொன்னான இயேசுவை புண்ணிய நல்நேசரை
கொண்டு செல்வோம் பூலோகமெங்கும்
அவர் ஒன்றே வழி என்றே கூறுவோம்

அவர் எந்நாளும் நம்மோடு இருப்பதினால்
அலைகள் புயல்கள் நம்மை அசைப்பதில்லை
அஞ்சாமல் செல்வோம் வஞ்சகனை வெல்வோம்
அரணான கோட்டைகளை பிடித்திடுவோம் நாம்

அவர் எலியா, எலிசா மூலம் அற்புதம் செய்தார்
எங்கள் மூலம் இந்த நாளில் நிச்சயம் செய்வார்
எத்தனையோ நோய்கள் அத்தனையும் போக்கும்
இயேசுவின் ரத்தத்தாலே ஜெயம் பெறுவோம் நாம்

காலமும் கடல் அலையும் காத்திருக்காது
உள்ள காலத்திலே தேசத்தை கலக்கிடுவோம்
கல்லான நெஞ்சம் கரைந்திட செய்யும்
கனிவான கர்த்தர் பணி செய்திடுவோம் நாம்

# 10. ஓசை உள்ள கைத்தாளம் -Fm

ஓசை உள்ள கைத்தாளம் போடுங்க
நீங்க உற்சாகமாய் நடமாடுங்க-2
நடமாடுங்க -2நன்றி சொல்லி நன்றி சொல்லி நடமாடுங்க -2

உடன்படிக்கை பெட்டியும் உண்டு
அங்கு தாவீது நடமாடினான் - 2
சுரமண்டல வாத்தியத்தோடு
அவன் ஆடிபாடி நடமாடினான் - 2

நடனமாடி துதிக்கிறபோது
நம்மை நெருக்கிடும் கஷ்டங்கள் ஏது - 2
துள்ளி துள்ளி துதிக்கிற போது
நம்மை உத்துப்பார்க்கும் எதிரிகள் யாரு -

## 11. பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே -D

பரிசுத்தர் பரிசுத்தர் இயேசுவே வல்லமை உடையவரே
வான் புவி உந்தன் மகிமையால் நிறைந்தனவே
ஓசன்னா ஓசன்னா வானில் ஓசன்னா

1. கர்த்தர் செய்த நன்மைக்காய் என்னத்தை செலுத்திடுவோம்
இரட்சிப்பின் பாத்திரம் எடுத்து நாம் தொழுதிடுவோம்

2. மகிமை மாட்சிமை நிறைந்தவர் ஆண்டவர் பெரியவரே
அவரது மகிமை அடைந்திட தொழுதிடுவோம்

3. அன்பு உருக்கம் உடையவர் அன்பால் நிறைந்தவரே
அவரது அன்பை அடைந்திட தொழுதிடுவோம்

4. தாழ்மை இரக்கம் நிறைந்தவர் தயவும் நிறைந்தவரே
இராஜாதி இராஜன் இயேசுவை போற்றிடுவோம்

Holy, holy, holy Lord
God of power and might, - 2 Hosanna

Heaven and earth are full of Your glory
Hosanna in the highest, hosanna in the highest
Blessed is He who comes in the name of the Lord
Hosanna in the highest

Holy, holy, holy Lord, holy, holy, holy
God of power and might
Holy, holy, holy Lord, holy, holy, holy
God of power and might

Heaven and earth are full of Your glory
Hosanna in the highest, Hosanna in the highest
Blessed is He who comes in the name of the Lord
Hosanna in the highest, Hosanna in the highest

Hosanna in the highest

# 12. ஓசன்னா ஓசன்னா -G

ஓசன்னா ஓசன்னா உன்னதத்தில் ஓசன்னா
உம்மை உயர்த்திடுவேன் துதி நிறைவுடன்
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர் ஓசான்னா ராஜ ராஜனே
மகிமை மகிமை மகிமை ராஜ ராஜனே
கர்த்தரே நீர் உயர்ந்திடுவீர் மகிமை ராஜ ராஜனே

Hosanna, hosanna, hosanna in the highest
Lord we lift up your name
With the heart full of praise
Be exalted 'o' Lord our God

Hosanna in the highest
Glory, glory glory to the king of kings
Lord we lift up your name
With the heart full of praise
Be exalted 'o' Lord our God
Glory to the King of Kings

# 13. வழி சொன்னவர் வழியுமானவர் –G

வழி சொன்னவர் வழியுமானவர்
வழி சத்தியம் ஜீவனுமாய் வந்தவர்
வார்த்தை என்றவர் வார்த்தையானவர்
உலகினிலே ஒளியாக உதித்தவர்

மண்ணோர் போற்றும் மன்னாதி மன்னர்
வின்னோர் போற்றும் தேவாதி தேவன்
சான்றோர் போற்றும் தூயாதி தூயர்
ராஜாதி ராஜன் இவர் - இயேசு

இயேசுவே தெய்வம்
ஒரே ஒரு தெய்வம்
இயேசுவே தேவன் மெய்யான தேவன்
இயேசுவே தெய்வம்
தேடி வந்த தெய்வம்
இயேசுவே தேவன்
மீட்க வந்த தேவன்
இயேசுவே இராஜா ராஜாதி ராஜா - 2
இயேசு இரட்சகர் உயிர் ஈந்த இரட்சகர்

இயேசுவே ஆண்டவர்
உயிர்த்தெழுந்த ஆண்டவர்
இயேசுவே கர்த்தனாம் கர்த்தாதி கர்த்தனாம்
இயேசுவே ராஜனாம் ராஜாதி ராஜனாம்
இயேசுவே ராஜா ராஜாதி ராஜா - 2

# 14. உம் நாமம் வாழ்க ராஜா -Cm

உம் நாமம் வாழ்க ராஜா
விண் தந்தையே – 4
உம் அரசு வருக ராஜா விண் தந்தையே – 4

வாழ்க ராஜா அல்லேலூயா – 4
அல்லேலூயா ஓசன்னா – 4

யெகோவா யீரே – 2 உம் நாமம் பரிசுத்தப்படுவதாக
யெகோவா நிசியே என்றும் வெற்றி தருவீர்

யெகோவா ரூவா–2 உம் நாமம் பரிசுத்தப்படுவதாக
யெகோவா ரா.ஃ.பா சுகம் தருபவரே

ராஜாதி ராஜா நீரே உம் நாமம் பரிசுத்தப்படுவதாக–2
உயிரோடு எழுந்தவரே வேகமாய் வாருமையா

மாரநாதா அல்லேலூயா -4 அல்லேலூயா ஓசன்னா -4

# 15. இயேசு ராஜன் வந்துவிட்டார் -Gm

இயேசு ராஜன் வந்துவிட்டார் - நாம்
கூடும் இந்த இடத்திலே
ஓசன்னா ஓசன்னா – 2

இருளான உன் வாழ்வுதான்
இப்போ வெளிச்சமாகவே மாறுதே
இயேசுவின் பேரொளி நம்மேல் வீச
எழும்பி ஜொலித்திடுவோம்

சாத்தானை ஜெயித்த இயேசுதான்
நம்மில் உலாவிக்கொண்டு இருக்கிறார்
நோய்களும் பேய்களும் சாபங்களெல்லாம்
பயந்து ஓடிடுதே

அந்தகார வல்லமை முறித்திட
ஆவியானவர் இறங்கி இருக்கிறார்
கர்த்தரின் கரத்தால் கட்டுகளெல்லாம்
அறுக்கப்படுகிறதே

ஆவியின் வல்லமை நம்மிலே
இப்போ அளவில்லாமலே ஊற்றுகிறார்
அனலாய் நாமும் கொளுந்துவிட்டெறிய
அக்கினி இறங்கிடுதே

# 16. அதரிசனமான தேவனிவர் -E

அதரிசனமான தேவனிவர்
தேவனுடைய தச்சுருபமே
சகலமும் உம்மை பணிந்திடும்
நீர் மாட்சிமை உடையவரே

ஓசனா (2) நீர் உயரந்தவர் இயேசுவே
ஓசனா (2) நீர் பரிசுத்தர் இயேசுவே
நீர் பெரியவர் இயேசுவே

உமக்கு முன்பாக எவரும் இல்லை
உமக்கு பின்பாக இருப்பதும் இல்லை
சகலமும் உம்மை பணிந்திடும் நீர் மாட்சிமை உடையவரே
- ஓசன்னா.....

மகிமையின் நம்பிக்கை நீரல்லவோ
பூர்வ இரகசியமும் நீரல்லவோ
சகலமும் உம்மில் நிலை நிற்க்கும்
நீர் நித்திய ஆளுனரே
- ஓசன்னா.....

## 17. ஓயாமல் துதிப்போம் காலமெல்லாம் பாடுவோம் -F

ஓயாமல் துதிப்போம் காலமெல்லாம் பாடுவோம்
ராஜாதிராஜாவாம் இயேசுவையே - என்றும்

பாடு ஓசன்னா ஓசன்னா ஓசன்னா
என்றும் ஓசன்னா ஓசன்னா ஓசன்னா

1. சத்துருவை மிதிப்பாய் எதிரி அடங்குவான்
இயேசுவே ஜெயிப்பார் ராஜரிகம் பண்ணுவார்
நீயோ கரங்களை தட்டியே துதித்துக்கொண்டிரு

2. கட்டுகளை அறுப்பார் சாபங்களை முறிப்பார்
வேதனையை மாற்றுவார் புதுபெலன் தருவார்
நீயோ கரங்களை அசைத்து துதித்துக்கொண்டிரு

3. விண்ணப்பத்தை கேட்பார் கிருபையை பொழிவார்
வாக்குத்தத்தம் செய்தார் நிறைவேற்றி முடிப்பார்
நீயோ கரங்களை உயர்த்தி துதித்துக்கொண்டிரு

## 18. உயிரோடு எழுந்தவரே - A

உயிரோடு எழுந்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
ஜீவனின் அதிபதியே
உம்மை ஆரதைனை செய்கிறோம்

அல்லேலூயா ஓசன்னா-(4)

1. மரணத்தை ஜெயித்தவரே
உம்மை ஆராதனை செய்கிறோம்
பாதாளம் வென்றவரே
உம்மை ஆரதைனை செய்கிறோம்

அல்லேலூயா ஓசன்னா-(4)

# 19. என்னை நடத்திடும் தேவன் - Cm

என்னை நடத்திடும் தேவன் என்னோடு இருக்க
பயமே எனக்கில்லையே
நான் நம்பிடும் தேவன் என் துருகமாய் இருப்பதால்
கலக்கமே எனக்கில்லையே- 2

பயமில்லை - 2 பயமில்லையே
நம் சார்பில் கர்த்தர் உண்டு பயமில்லையே
பயமில்லை - 2 பயமில்லையே
நமக்காக யுத்தம் செய்வார் பயமில்லையே

1. சிறு கூட்டமே நீ பயப்படாதே
கர்த்தர் என்றும் நம் துணைநிற்கிறார்
எதிரிகள் வெள்ளம் போல் எதிராக வந்தாலும்
ஆவியானவர் கொடியேற்றுவார்

2.பாதைகள் எங்கும் தடை கற்களோ
தாமதம் மட்டும் பதிலானதோ
நேர்வழியாய் நம்மை நடத்திடும் தேவன்
நிச்சயம் நடத்துவார் பயமில்லையே

3.முந்தினதை நீ யோசிக்காதே
பூர்வமானதை சிந்திக்காதே
மேலானதை நீ சுதந்தரிக்க
வேரூன்ற செய்வார் பயமில்லையே

ஓசன்னா-6

# 20. ஓசன்னா பாடுவோம் - D

ஓசன்னா பாடுவோம்
இயேசுவின் தாசரே
உன்னதத்திலே தாவீது
மைந்தனுக்கு ஓசன்னா

1.முன்னும் பின்னும் சாலேம் நகர்
சின்னபாலர் பாடினார்
அன்றுபோல இன்றும் நாமும்
அன்பாய்த் துதி பாடுவோம்

2. சின்ன மறி மீதில் ஏறி
அன்பர் பவனி போனார்
இன்னும் என் அகத்தில் அவர்
என்றும் அரசாளுவார்

3. பாவமதைப் போக்கவும்
இப்பாவியைக் கைத் தூக்கவும்
பாசமுள்ள இயேசையாப்
பவனியாக போகிறார்

4. பாலர்களின் கீதம் கேட்டுப்
பாசமாக மகிழ்ந்தார்
ஜாலர் வீணையோடு பாடித்
தாளைமுத்தி செய்குவோம்

5. குருத்தோலை ஞாயிற்றில் நம்
குருபாதம் பணிவோம்
கூடி அருள் பெற்று நாமும்
திரியேகரைப் போற்றுவோம்

# 21. வெற்றிக்கொடி பிடித்திடுவோம் - F

வெற்றிக்கொடி பிடித்திடுவோம் - நாம்
வீரநடை நடந்திடுவோம்

1. வெள்ளம்போல சாத்தான் வந்தாலும்
ஆவிதாமே கொடி பிடிப்பார்
அஞ்சாதே என் மகனே
நீ அஞ்சாதே என் மகளே

2. ஆயிரம்தான் துன்பம் வந்தாலும்
அணுகாது அணுகாது
ஆவியின் பட்டயம் உண்டு - நாம்
ஆலகையை வென்று விட்டோம்

3. காடானாலும் மேடானாலும்
கர்த்தருக்கு பின் நடப்போம்
கலப்பையில் கை வைத்திட்டோம்
நாம் திரும்பி பார்க்க மாட்டோம்

4. கோலியாத்தை முறியடிப்போம்
இயேசுவின் நாமத்தினால்
விசுவாச கேடயத்தினால்
பிசாசை வென்றிடுவோம்

## 22. இயேசுவை உயர்த்துவோம் -D

இயேசுவை உயர்த்துவோம்
நம் துதிகளின் பாத்திரர் அவர்
ஓசன்னா வாழ்க இயேசுவே
என் இரட்சிப்பின் கன்மலையாம்
கர்த்தாவே - 2

O magnify the Lord for
He is worthy to be praised
Hosanna, blessed be the Rock
Blessed be the Rock of my salvation – 2




---